2021

# தவக்கால

## தொடக்க தயாரிப்பு

## திருநீற்றுப் புதன்



Est. 1955
DIOCESE OF PENANG
MALAYSIA

## தயாரிக்க வேண்டிய பொருள்கள் :

- சுத்தமான மண் அல்லது எரித்த குருத்தோலை/இலை
- தீர்த்தம்

## ஆரம்ப பாடல்

https://youtu.be/kag8xOLjJEY

இயேசுவே என் தெய்வமே
என் மேல் மனமிரங்கும்

1. நான் பாவம் செய்தேன் உம்மை
   நோக செய்தேன்
   உம்மை தேடாமல் வாழ்ந்து
   வந்தேன்
   என்னை மன்னியும் தெய்வமே

2. உம்மை மறுதலித்தேன் பின்
   வாங்கிப் போனேன்
   உம் வல்லமை இழந்தேனய்யா
   என்னை மன்னியும் தெய்வமே

3. முள்முடி தாங்கி ஐயா காயப்பட்டீர்
   நீர் எனக்காக பலியானீர்
   உம் ரத்தத்தால் கழுவிவிடும்

Yesuve en theivame
En mael manamiranggum

1. Naan paavam seithen ummai
   noega seithen
   Ummain thaedaamal vaazhnthu vanthen
   Ennai maniyum theivame

2. Ummai maruthalitthen pin vaanghi
   poenanen
   Um vallamai izhanthenaiyya
   Ennai manniyum theivame

3. Mulmudi thaanghi aiyaa kaayappaddeer
   Neer enakaaga paliyaaneer
   Um ratthathaal kazhuvividum

## தொடக்க செபம்

தந்தை மகன் தூய ஆவியின் பெயராலே. ஆமென்

**தலைவர்** : ஆண்டவரே, இந்த புனிதமான நோன்பு காலத்தை நாங்கள் கிறிஸ்துவ சேவைகளில் ஈடுபடும்போது சுயகட்டுப்பாடு எனும் ஆயுதத்தோடு ஆன்மிக தீய ஆவிகளை எதிர்கொள்ள உம்மிடம் வேண்டுகிறோம். இவை அனைத்தையும் உம்மோடு தூய ஆவியின் ஒன்றிப்பில் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும் உம் மகனுமாகிய இயேசு கிறிஸ்து வழியாக மன்றாடுகிறோம்.

**அனைவரும்** : ஆமென்

(நற்செய்தி வாசிக்கப்படும். அனைவரும் அமர்ந்து கொள்ளவும் )

# நற்செய்தி வாசகம்(மத்தேயு 6:1-6,16-18)

✠ மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்.

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: "மக்கள் பார்க்க வேண்டுமென்று அவர்கள் முன் உங்கள் அறச் செயல்களைச் செய்யாதீர்கள். இதைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். இல்லையென்றால் உங்கள் விண்ணகத் தந்தையிடமிருந்து உங்களுக்குக் கைம்மாறு கிடைக்காது.

நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப்பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். வெளிவேடக்காரர் மக்கள் புகழ வேண்டுமென்று தொழுகைக்கூடங்களிலும் சந்துகளிலும் நின்று அவ்வாறு செய்வர். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் தர்மம் செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்.
அப்பொழுது நீங்கள் செய்யும் தர்மம் மறைவாயிருக்கும்; மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்.

நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது வெளிவேடக்காரரைப் போல் இருக்க வேண்டாம். அவர்கள் தொழுகைக்கூடங்களிலும் வீதியோரங்களிலும் நின்றுகொண்டு மக்கள் பார்க்கவேண்டுமென இறைவேண்டல் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். ஆனால் நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக்கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்.

மேலும் நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்க வேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப் படுத்திக்கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து, முகத்தைக் கழுவுங்கள். அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது; மாறாக, மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார்."

இது கிறிஸ்துவின் நற்செய்தி.

அனைவரும்: கிறிஸ்துவே உமக்கே புகழ்.

# சிந்தனைக்கு

இன்றைய நற்செய்தி ஆண்டவர் நமது நேர்மையான செயல்களுக்கே கைம்மாறு அளிப்பார் மனிதர்களுக்கு அல்ல என்பதை கூறுகிறது. தவக்காலம் என்பது "எதாவது ஒன்றை விட்டுக்கொடுப்பது" அல்ல.
மாறாக மற்றவர்களுக்கு ஏதாவது ஒன்றை செய்யும் காலம். மற்றவர்களுக்கும். ஆண்டவருக்கும். இது மனம்திரும்புவதற்க்கான காலம். இந்த மாற்றம் ஒரு நிகழ்வு அல்ல, இது ஒரு செயல்முறை. இறைவனுக்குரிய பாதையை கண்டுபிடிக்க நாம் பல இடையூறுகளை அனுபவிக்கலாம் ஆனால் நாம் மனம் தளரக் கூடாது. முயற்சியை கைவிடக்கூடாது. நம்முடைய விசுவாசத்தை புதுப்பிக்கவும், இறையருளையும் அன்பையும் திறந்த மனதோடு பெறுவதற்கும் ஏற்றக் காலம். செபம், நோன்பு, தர்மம் ஆகிய செயல்கள் நமது ஒறுத்தல் மற்றும் ஆண்டவரோடும் மற்றவர்களோடும் ஒன்றிக்க முயலும் செயல்கள் ஆகும். ஆகவேதான் இந்த செயல்கள் அனைத்தும் தவக்காலத்தோடு பொருந்தி வருகிறது. நமது இந்த ஒறுத்தல் முயற்சிகள் நமது பழைய பாவங்களுக்காக மட்டுமில்லாமல் நமது இன்றைய கண்மூடித்தனமான செயல்களுக்காகவும் ஆகும். செபம், நோன்பு, தர்மம் ஆகிய செயல்கள் நமது கண்களையும், காதுகளையும், உள்ளத்தையும், உணர்வுகளையும் ஆண்டவருக்கும் மற்றவர்களுக்கும் திறந்து வைக்க உதவுகிறது. கிறிஸ்துவை மையமாக கொண்டு, தூய ஆவியின் உதவியோடு இந்தத் தவக்காலத்தில் பயணிப்போம்.

(சிறிது நேரம் அமைதியில் சிந்திப்போம்)

## பதிலுரைப் பாடல் (திபா 51: 1-2. 3-4a. 10-11. 12,15 (பல்லவி: 1a))

பல்லவி : ஆண்டவரே! இரக்கமாயிரும்; ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம்.

1. கடவுளே! உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும்; உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றங்களைத் துடைத்தருளும். என் தீவினை முற்றிலும் நீங்கும்படி என்னைக் கழுவியருளும்; என் பாவம் அற்றுப்போகும்படி என்னைத் தூய்மைப்படுத்தியருளும்.

   - பல்லவி

2. ஏனெனில், என் குற்றங்களை நான் உணர்கின்றேன்; என் பாவம் எப்போதும் என் மனக்கண்முன் நிற்கின்றது.உமக்கு எதிராக நான் பாவம் செய்தேன்; உம் பார்வையில் தீயது செய்தேன்.

   – பல்லவி

3. கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்; உறுதி தரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும். உமது முன்னிலையிலிருந்து என்னைத் தள்ளிவிடாதேயும்; உமது தூய ஆவியை என்னிடமிருந்து எடுத்துவிடாதேயும்.

   - பல்லவி

4. உம் மீட்பின் மகிழ்ச்சியை மீண்டும் எனக்கு அளித்தருளும்; தன்னார்வ மனம் தந்து என்னைத் தாங்கியருளும். என் தலைவரே! என் இதழ்களைத் திறந்தருளும்; அப்பொழுது, என் வாய் உமக்குப் புகழ் சாற்றிடும்.

   – பல்லவி

## சிறப்பு மன்றாட்டு

தலைவர்: இந்த தவக்கால பயணத்தில் கிறிஸ்து உயிர்ப்பு விழாவன்று புனித திருமுழுக்கை பெறப்போகும் அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். ஆண்டவரின் அன்பை மனதார உணர்ந்து அறிவொளி பெற்று மனம் திரும்பிட ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

அனைவரும்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்

## சாம்பல் ஆசீர்வதிப்பு

**தலைவர்** : இறைவா, நாங்கள் வெறும் தூசு என்று உணர்த்தும் இந்த சாம்பலை ஆசீர்வதியும் (✠). எங்கள் பாவங்களை மன்னித்து இறைவனுக்கு ஏற்ற சீடர்களாய் இந்த தவக்காலத்தில் வாழ்ந்திட அருள்புரியும். ஏனெனில், நீர் பாவிகள் சாகாமல் உம் மகனோடு உயிர்ப்பிக்க விரும்புகிறீர். இவை அனைத்தையும் உம்மோடு என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்யும் உம் மகன் வழியாக மன்றாடுகிறோம்.

**அனைவரும்**: ஆமென்.

(தலைவர் சிறிது தீர்த்தத்தை சாம்பலின் மீது தெளிப்பார்)

## நெற்றியில் சாம்பல் இடுதல்

ஒருவர் மற்றவர்க்கு நெற்றியில் சாம்பலை சிலுவை அடையாளம் இடும்போது சொல்ல வேண்டியது:-

| | | |
|---|---|---|
| தூசியிலிருந்து வந்தாய் திரும்பவும் தூசிற்க்கே திரும்புவாய் | அல்லது | மனம்திரும்பி நற்செய்தியை நம்புங்கள் |

- நெற்றியில் சாம்பல் அடையாளம் இல்லாதவர்கள் ஒருவர் மற்றவருக்கு சிலுவை அடையாளமிட்டு அவ்வாறே கூறலாம்

## முடிவு செபம்

தலைவர்: இரக்கமிகு விண்ணுலக தந்தையே, இந்த புனிதமிகு தவக்காலத்தை தொடங்க போகும் நாங்கள் உம்முன் தாழ்ச்சியுள்ள மனதோடு நிற்கிறோம். இந்த தவக்காலத்தில் எங்கள் பாவங்களை மன்னித்து தூய்மைப்படுத்தும் . உம்மோடு இணைந்து நடக்கவும் உம்மை அன்பு செய்யவும் கூடிய புதிய உள்ளதை தாரும். ஒவ்வொரு நாளையும் உமக்கு ஏற்ற நாளாகவும் எங்களின் மீட்பின் பாதையில் புது உயிர் பெற்றிடவும் உம்மிடம் இறைஞ்சுகிறோம். உம் திருமகன் இயேசு கிறிஸ்துவின் வழியாக மன்றாடுகிறோம்.

அனைவரும்: ஆமென்.

கர்த்தர் கற்பித்த செபம் அனைவரும் சேர்ந்து சொல்லுவோம்

## இறுதி பாடல்

https://youtu.be/QLlQVwTJsYg

என் வாழ்வில் ஏசுவே எந்நாளும் இங்கே
எல்லாமும் நீயாக வேண்டும்
எந்தன் எல்லாமும் நீயாக வேண்டும்
சோகங்கள் ஆறாமல் நான் வாடும் போது
தாயாக நீ மாற வேண்டும் - அன்பு
தாயாக நீ மாற வேண்டும்

1. பாரங்கள் தாங்காமல் சாய்கின்ற போது
   பாதங்கள் நீயாக வேண்டும் -
   எந்தன் பாதங்கள் நீயாக வேண்டும்
   பாவங்கள் கடலாகி நான் மூழ்கும் போது
   ஓடங்கள் நீயாக வேண்டும் -
   வரும் ஓடங்கள் நீயாக வேண்டும்

2. காலங்கள் தோறும் என் நெஞ்ச வீட்டில்
   தீபங்கள் நீயாக வேண்டும் - சுடர்
   தீபங்கள் நீயாக வேண்டும்
   தாகங்கள் தீராமல் நான் ஏங்கும் போது
   மேகங்கள் நீயாக வேண்டும் -
   மழை மேகங்கள் நீயாக வேண்டும்

En vaazhvil Yesuve ennaalum inghe
Yellaamum neeyaaghe vendum
Enthan yellaamum neeyaaghe vendun
Soeghanghal aaraamal naan vaadum poethu
Thaayaaghe nee maara vendum - anbu
Thaayaaghe nee maara vendum

1. Baaranghal thaangaamel saaighindre poethu
   Paathanghal neeyaaghe vendum -
   enthan paathanghal neeyaaghe vendum
   Paavanghal kadalaaghi naan moozhghum poethu
   Oedanggal neeyaaghe vendum -
   varum oedanggal neeyaaghe vendum

2. Kaalanghal thoerum en nenja veedtil
   Theebhangal neeyaaghe vendum -
   sudar theebanghal neeyaaghe vendum
   Thaaghangal theeraamal naan aenggum poethu
   Maeghengal neeyaaghe vendum -
   mazhai maeghenghal neeyaghe vendum

**நீங்கள் புனித வாரத்திற்கான உபகரணத்தை**
**21 மார்ச் 2021 க்குள் பெறுவீர்கள்**